# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC.117/2024 <br> Sessions : <br> Deposition of Witness for : LW-11/PW- 4 <br> Name : ரிச்சர்ட் செல்வகுமார் <br> (சிறப்பு உதவி ஆய்வாளர்) <br> Father's/Husband's Name : சக்கரை <br> Nationality : Indian | Village : கும்பகோணம் <br> Age : 58 <br> Taluk : கும்பகோணம் <br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 18.03.2026**

**எதிரிகள் ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>:**

நான் தற்போது திருப்பனந்தாள் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகளான சிறப்பு உதவி ஆய்வாளர் குழந்தைவேல் மற்றும் காவல் ஆய்வாளர் கணபதி ஆகியோருடன் சேர்ந்து பணிபுரிந்து வந்த சமயத்தில் அவர்களுடைய கையெழுத்து கையொப்பம் எழுத்து நடை எனக்கு நன்கு பரிட்சயம் என்பதாலும். வீண் காலதாமதம் மற்றும் பொருட்செலவை கருத்தில் கொண்டு இந்த வழக்கின் தன்மை கருதி ஆவணங்களின் அடிப்படையில் அவர்களுக்காக சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 21.09.2013 ம் தேதி 22 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் குழந்தைவேலு நிலைய பொறுப்பில்இருந்தபோது அசா1 கருணாநிதி என்பவர்

நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.304/2013 சட்டப்பிரிவுகள் 147, 148, 448, 294(பி), 506(2) இதச பிரிவுகளின் படி வழக்கு பதிவு செய்துள்ளார். அவர் பெற்ற புகார் மனு அசாஆ 2 ஆகும். அவர் பதிந்த முதல் அச்சு முதல் தகவல் அறிக்கை அசாஆ 3 ஆகும். பின்பு வழக்கை புலன் விசாரணைக்கு காவல் ஆய்வாளர் கணபதி என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளார். காவல் ஆய்வாளர் கணபதி வழக்கு மேல் புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 22.09.2013 ம் தேதி காலை 7 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கணேஷ், தனராஜன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகசர் **அசாஆ 4** மற்றும் மாதிரிவரைப்படம் **அசாஆ 5** ஆகும். பின்பு பார்வை மகசர் சாட்சிகள் கணேஷ், தனராஜன் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு சம்பவ சாட்சிகள் கருணாநிதி, பாலகுரு, மணிகண்டன், முருகன், செல்வகுமார் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேற்படி சாட்சிகள் சம்பவத்தைப்பற்றி தெளிவாகவும் விளக்கமாகவும் என் வாக்குமூலத்தில் உள்ளபடி கூறினார்கள். மேற்படி சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும், புலன் விசாரணையிலிருந்தும், வழக்கு சம்பவம் உண்மை என்பது தெரிய வந்ததால் எதிரிகளை கைது செய்ய தேடியபோது இந்த வழக்கின் 1வது எதிரி ஜெயராமன் 2 வது எதிரி கணபதி ஆகிய இருவரையும் 28.09.2013 ம் தேதி 16 மணிக்கு மணலூர் பஸ்டாப் அருகில் நின்றிருந்தவர்களை தக்க காரணம் கூறி கைது செய்து நிலையம் வந்து தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். இந்த வழக்கின் 4 வது எதிரி கண்ணன் என்பவரை 28.09.2013 ம் தேதி மாலை 7 மணிக்கு மணலூர் பஸ்டாப் அருகில் நின்றிருந்தவரை தக்க காரணம் கூறி கைது செய்து நிலையம் வந்து தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். இந்த வழக்கின் 5வது எதிரி ரமேஷ்

என்பவரை 14.10.2013 ம் தேதி பகல் 12 மணிக்கு திருமாந்துறை கோணமதகு அருகே நின்றிருந்தவர்களை தக்க காரணம் கூறி கைது செய்து நிலையம் வந்து தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். இந்த வழக்கின் 3 வது எதிரி ராஜா என்பவர் மற்ற எதிரிகளான சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் முன்பிணை பெற்றதால் கைது நடவடிக்கை மேற்கொள்ளபடவில்லை. இறுதியாக காவல் ஆய்வாளர் வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 147, 148, 448, 294(பி), 506(2) இதச பிரிவுகளின் படி 28.02.2014 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வாதியிடம் தவறான தகவலை பெற்று பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeswari,
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர். (FAC)**